# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 18409 / 2007 / எம்சி. 8 நாள் 26.10.2007**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - அக்டோபர் 2007-ல் நடைபெறுவது – தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற **30.10.2007** ஆம் தேதி செவ்வாய் கிழமை பிற்பகல் **4.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தலைமை அலுவலர்களும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

இணைப்பு : கூட்டக்குறிப்பு

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

/ உண்மைநகல் உத்திரவின்படி/

26.10.07
மன்றச் செயலர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

மன்றச் செயலர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

நகல் :
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# அக்டோபர் -07ம் தேதிய மாமன்ற அவசரக்  கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண். | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1. | Jnnurm-திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்-குப்பை கூடைகள் வாங்குதல்-மறு ஒப்பந்தப்புள்ளி கோருதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 2. | Jnnurm-திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்-ஸ்கிப்லிப்டர் வாகனங்கள் மற்றும் கண்டெய்னர்கள் வாங்குதல்- மதிப்பீடு ரூ48.13 இலட்சம் -தி/ள் அசோக்லேலண்ட் லிமிடெட் நிறுவனம்-அனுமதி அளித்தல்-மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 3. | பொறியியல் பிரிவு-3 அபிவிருத்திப் பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 4. | நகரமைப்புப் பிரிவு-கிழக்கு மண்டலம்-புலியகுளம் கிராமம்-க.ச.எண் 1665 /1 - 0.23 ஏக்கர் நிலம்-நில மதிப்புத் தொகை செலுத்துதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 5. | Jnnurm-திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்- தி/ள் யு.பி.எல்-பி.இ.ஐ.எல் . நிறுவனத்திற்கு அனுமதி அளித்தல்- ஒப்பந்தப்புள்ளி ஏற்றல்-மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 6 | வருவாய் பிரிவு-கிழக்கு மண்டலம்-மகளிர் தங்கும் விடுதிகள்-சொத்து வரி விதித்தல்-மாற்றி அமைத்தல்-மாமன்ற முடிவு செய்தல்-தொடர்பாக. |
| 7 | பணியமைப்பு-உதவி நிர்வாக பொறியாளர் பணியிடங்களை நிரப்புதல்-பணிமைப்பு விதிகளை தளர்த்துதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 8 | பணியமைப்பு-உதவி பொறியாளர் பணியிடங்களை நிரப்புதல்-நியமனக்குழு தேர்வு செய்தது-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |

நன்றியுரை.

## திருக்குறள்

**உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**

**தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.**

**(குறள் - 596)**

**விளக்கம்**

**நினைப்பதெல்லாம் உயர்ந்த நினைப்பாகவே இருக்க வேண்டும். அது கைகூடாவிட்டாலும் அதற்காக அந்த நினைப்பை விடக்கூடாது.**

**- திருவள்ளுவர்.**

### ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய / குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் : 1

ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தும் பணிக்கு ரூ. 96.51 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினிற்கு மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் "ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு" கடந்த 02-02-2007-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி திட்டத்திற்கு அரசாணை 160 (டி) ந.நி.மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( மா.ந. – II ) துறை நாள் 17-04-2007-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் இம்மாநகராட்சியால் செயல்படுத்தப்படவுள்ள முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு மாநகரப் பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து குடியிருப்புகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து இருப்பு வைப்பதற்கு இம் மாநகராட்சியால் இரண்டு குப்பை கூடைகளை (பச்சை நிறத்தில் ஒன்று மற்றும் வெள்ளை நிறத்தில் ஒன்று ) இலவசமாக வழங்கப்படவுள்ளது. அதற்கு தேவையான 10 லிட்டர் கொள்ளளவு கொண்ட பாலிஎத்திலின் குப்பை கூடைகளை வாங்குவதற்கென ரூ. 117.21 இலட்சம் (ரூ. 1.1721 கோடி ) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு முதலாவது அழைப்பாக கடந்த 07-09-2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. தி / ள் பிரபுதயால் ஓம்பிரகாஷ் , புதுடெல்லி
2. தி / ள் சின்டெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், சென்னை
3. தி / ள் கே.எம்.எஸ். டிரேடர்ஸ், சென்னை

பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1 மற்றும் வரிசை எண் 2-ல் கண்ட நிறுவனங்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே தொழில் நுட்ப ரீதியாக தேர்ச்சி பெற்றதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு உறுப்பினர்களின் முன்னிலையில் 21-09-2007 அன்று விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | தி / ள் பிரபுதயால் ஓம்பிரகாஷ் , புதுடெல்லி | : | ரூ. 347,62,200.00 (மதிப்பீட்டைகாட்டிலும் 203.98% அதிகம்) |
| 2) | தி / ள் சின்டெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், சென்னை | : | ரூ. 421,36,000.00 (மதிப்பீட்டைகாட்டிலும் 268.46% அதிகம் ) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை காட்டிலும் அதிகமாக உள்ளதாலும் இந்த ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக உள்ளதாலும் அவற்றினை ரத்து செய்து மறுஒப்பந்தப்புள்ளிகள் கோர ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளது. மேலும் இப்பணியினை மத்திய அரசு நிர்ணயித்த காலகெடுவுக்குள் செய்து முடிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதால் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதலுடன் மறு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் : 11343 /2007/ எம்.டி.3

<u>மா.ம.தீர்மான எண் : 185 நாள் : 30.10.2007</u>

தரமான குப்பை கூடைகளைக் கூடைகளை வாங்கி வழங்கும் வண்ணம், மதிப்பீட்டுத் தொகையினை உயர்த்தி நிர்ணயம் செய்து ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது. அதற்காகும் கூடுதல் செலவினத்தை ஏற்கவும் அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 2

ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தும் பணிக்கு ரூ. 96.51 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினிற்கு மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் "ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு" கடந்த 02-02-2007-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி திட்டத்திற்கு அரசாணை 160 (டி) ந.நி.மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( மா.ந. – II ) துறை நாள் 17-04-2007-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் இம்மாநகராட்சியால் செயல்படுத்தப்படவுள்ள முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு தேவையான ஸ்கிப்லிப்டர் வாகனங்கள் மற்றும் 5 கன.மீட்டர் கொள்ளளவு கொண்ட கண்டெய்னர்களை வாங்குவதற்கென ரூ. 48.13 இலட்சம் (ரூ. 0.4813 கோடி ) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு முதலாவது அழைப்பாக கடந்த 07-09-2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. தி / ள் டாடா மோட்டார்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.
2. தி / ள் அசோக் லேலண்ட் லிமிடெட், சென்னை

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப ரீதியாக தேர்ச்சி பெற்றதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு உறுப்பினர்களின் முன்னிலையில் 21-09-2007 அன்று விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | தி/ ள் டாடா மோட்டார்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | : | ரூ. 49,58,868.00 (மதிப்பீட்டைகாட்டிலும் 6.64% அதிகம்) |
| 2) | தி / ள் அசோக்லேலண்ட் லிமிடெட், சென்னை | : | ரூ. 47,73,925.89 (மதிப்பீட்டைகாட்டிலும் 2.66% அதிகம்,) |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தி / ள் அசோக்லேலண்ட் லிமிடெட், சென்னை நிறுவனத்தார் குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ. 47,73,925.89 (மதிப்பீட்டைக் காட்டிலும் 2.66% அதிகம்) யினை கொடுத்திருந்தனர். மேற்படி நிறுவனத்தாரை விலையை குறைத்து கொடுக்க ( Negotiations ) கேட்டுக் கொண்டு அதன் பின்னர் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க பரிந்துரை செய்யலாமென ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு முடிவு செய்துள்ளது. இதனை தொடர்ந்து கடந்த 24-09-2007 தேதியிட்ட கடிதத்தில் அந்நிறுவனத்தாரை விலையை குறைத்து கொடுக்க ( Negotiations ) கேட்டுக் கொண்டதில் மேற்படி நிறுவனத்தார் அவர்களது 29-09-2007 ம் தேதியிட்ட கடிதத்தில் மேற்படி பணிக்கு ரூ. 46,46,083.50 என குறைத்து கொடுக்க இசைவு தெரிவித்தனர். அவ்வாறு விலைகுறைப்பு செய்யப்படுவதால் அவர்கள் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைகாட்டிலும் 0.08% குறைவானதாக அமையும்.

எனவே தி/ள் அசோக்லேலண்ட் லிமிடெட், சென்னை நிறுவனத்தாரால் விலை குறைப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ.46,46,083.50 (மதிப்பீட்டைகாட்டிலும் 0.08% குறைவு) யினை ஏற்று அனுமதிக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் : 12236 /2007/ எம்.டி.3

**மா.ம.தீர்மான எண் : 186 நாள் : 30.10.2007**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 3

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 25-09-2007-அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9444/07/ எம்.டி.4 | வார்டு எண் 49-க்குட்பட்ட திவான் பகதுூர் சாலையின் கிழக்கு பகுதியில், கௌலி பிரவுன் சாலை முதல் பொன்னுரங்கம் சாலை வரையில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் நடைபாதையை செப்பனிடுதல் | 16.25 | 18.9.07 முதல் அழைப்பு | தி/ள். எம்.எஸ். இஞ்சினியா்ஸ் | 22.33 % குறைவு |
| 2 | 9441/07/ எம்.டி.4 | வார்டு எண் 49-க்குட்பட்ட திவான் பகதுூர் சாலையின் மேற்கு பகுதியில் கௌலி பிரவுன் சாலை முதல் பொன்னுரங்கம் சாலை வரையில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் நடைபாதையை செப்பனிடுதல் | 16.25 | 18.9.07 முதல் அழைப்பு | தி/ள். எம்.எஸ். இஞ்சினியா்ஸ் | 22.40 % குறைவு |
| 3 | 1748/07/ எம்.டி.4 | வார்டு எண் 64-க்குட்பட்ட மேட்டுப்பாளையம் ரோட்டில் உரக்கிடங்கு அருகில் உள்ள மயானத்திற்கு அபிவிருத்திப்பணிகள் செய்தல் | 25.00 | 18.9.07 மூன்றாம் அழைப்பு | தி/ள். எம்.எஸ். இஞ்சினியா்ஸ் | 1.97 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு : வரிசை எண் 1 முதல் 2 வரையில் உள்ள பணியின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 3 உள்ள பணி குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும், அனுமதிக்கலாம்.

ந.க.எண். 9444/07/எம்.டி4.

**மா.ம.தீர்மான எண் : 187 நாள் : 30.10.2007**

பொருளில் வரிசை எண். 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள மேட்டுப்பாளையம் ரோட்டில் உரக்கிடங்கு அருகில் உள்ள மயானம் 64-வது வார்டுக்குட்பட்ட பகுதிஅல்ல என பதிவு செய்து அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 4

கோவை மவட்ட ஆட்சியர் அவர்களின் நே.மு.க. எண் 88947/96/ஆ4 நாள். 26.10.2006-ல் கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கோவை வடக்கு வட்டம் புலியகுளம் கிராமம், க.ச. எண். 1665 /1 -ல் 0.23 ஏக்கர் நிலம் மாநகராட்சிக்கு திருமண மண்டபம் கட்ட நிலம் நில உரிமை மாற்றம் அரசாணை நிலை எண் . 1226 வருவாய் (எஸ்) துறை 16.11.1996 -ல் ஆணையிடப்பட்டுள்ளவாறு நிலத்திற்கான நில மதிப்புத் தொகை ரூ. 18,90,500/- அரசாணையில் தெரிவித்துள்ளவாறு நில உரிமை மாற்றம் செய்யப்படும் நாளில் நடப்பில் உள்ள நில மதிப்பினை இதுவரை மாநகராட்சியால் செலுத்தப்படவில்லை எனத் தெரிவித்து, இவ்வினத்தில் சிறப்பு நடவடிக்கை மேற்கொண்டு அரசு கணக்கில் நில மதிப்புத் தொகையினை செலுத்தக் கோரப்பட்டுள்ளது.

புலியகுளம் கிராமம், க.ச. எண். 1665 /1-ல் 0.23 ஏக்கர் நிலம் மாநகராட்சியால் வருவாய்த் துறை அரசாணை நிலை எண். 1225 நாள் . 18.11.1996 -ன்படி, நில உரிமை மாற்றம் பெறப்பட்டு 25.4.1994-ல் சுவாதீனம் பெறப்பட்டு மாநகராட்சியால் திருமண மண்டபம் கட்டப்பட்டு மாநகராட்சி பராமரிப்பில் உள்ளது. தற்போது ந.க. எண். 11039 / 2002 / கிஎ9. நாள். 24.7.2006 -ன்படி கிழக்கு மண்டல புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபம் சர்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு மாத வாடகை அடிப்படையில் வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளவாறு மேற்படி அன்றைய நாளைய நில மதிப்பு ரூ. 18,90,500/- ஐ அரசு கணக்கிற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் செய்யலாம் ந.க. எண். 100924 / 85 / (எச்5) / கி எச் .2

<u>மா.ம.தீர்மான எண் : 188 நாள் : 30.10.2007</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 5

ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தும் பணிக்கு ரூ. 96.51 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினிற்கு மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் “ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு” கடந்த 02-02-2007-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி திட்டத்திற்கு அரசாணை 160 (டி) ந.நி.மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( மா.ந. – II ) துறை நாள் 17-04-2007-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாநகர மன்றம் தீர்மான எண் 15 நாள் 31-05-2007 – ல் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி திட்டத்தில் மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களின்படி பகுதி - I ஆக முதற் கட்ட குப்பை சேகரிப்பு ( **Primary Collection** ) பணிகள் அனைத்தையும் இம்மாநகராட்சியால் செயல்படுத்தவும், பகுதி – II ஆக நவீன குப்பை மாற்று நிலையங்கள் நிறுவுதல், இரண்டாம் கட்ட குப்பை அகற்றும் பணிகள் மேற்கொள்ளுதல், நவீன உரக்கிடங்கு நிறுவுதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் சுகாதார கட்டமைப்பு நிறுவுதல் (**Modern Transfer Station, Secondary Transportation , Compost plant and Sanitary Landfill**) போன்ற பணிகளை பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் (**Public Private Partnership arrangement** ) செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பகுதி – II ல் குறிப்பிட்டுள்ள பணிகளை திட்ட ஆலோசகர்களால் தயாரித்து வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான வரைவு படிவங்கள் உள்ளடங்கிய ஏனைய ஒப்பந்தப்பத்திரப் படிவங்களை (**Draft Request For Qualification, Request for Proposal and Concession Agreement Documents**) மேலாய்வு மற்றும் இறுதியாக்கும் பணிகளுக்கும் அதன் பின்னர் ஸ்பெஷல் பர்பஸ் வெஹிகிள் (**Special Purpose Vehicle**) எனப்படும் ஒரு அமைப்பினை

தோற்றுவித்துக் கொள்ள தி / ள் ஐ.எல் & எப். எஸ் இன்பராஸ்ட்ரக்சா் டெவலப்மென்ட் காா்ப்பரேசன் லிமிடெட், புது டெல்லி நிறுவனத்தாரை நியமனம் செய்யப்பட்டது. அவ்வாறு



மேலாய்வு மற்றும் இறுதியாக்கம் செய்யப்பட்ட படிவங்களுக்கு மத்திய நகா்புற மேம்பாட்டு அமைச்சகம் கடந்த 30-07-2007-அன்று அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி மத்திய அரசின் அனுமதியினை தொடா்ந்து பகுதி – II ல் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள முதற்கட்டமாக தகுதி கேட்பு அறிக்கை (Request For Qualification) உலகளாவிய முறையில் கோரப்பட்டதில் நிா்ணயிக்கப்பட்ட காலக்கெடுவான 16-08-2007 தேதிவரை கீழ்கண்ட ஒன்பது நிறுவனங்கள் அவா்களது பிரேரணைகளை கொடுத்தனா். அவை பின்வருமாறு :

1) தி / ள் சுபாஷ் பிராஜெக்ட்ஸ் & மாா்கெட்டிங் லிமிடெட், புது டெல்லி
2) தி / ள் யு.பி.எல் - பி.இ.ஐ.எல், மும்பை
3) தி / ள் ஜெ.பி.எம். ஃபனால்கா என்வைராண்மென்ட் மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட், ஹரியானா
4) தி / ள் ஹைட்ரோ ஏா்டெக்டானிக்ஸ் ( பிசிடி ) லிமிடெட், மும்பை
5) தி / ள் வியோலியா என்வைராண்மென்டல் சா்வீசஸ் ஏசியா பிரைவேட் லிமிடெட், சென்னை
6) தி / ள் ராம்கி என்வைரோ இஞ்சினியா்ஸ் லிமிடெட், ஹைதராபாத்
7) தி / ள் கூடு, கோயம்புத்தூா்
8) தி / ள் ஆன்டணி வேஸ்ட் ஹான்டலிங் செல் பிரைவேட் லிமிடெட், நாவி மும்பை
9) தி / ள் ஓ.பி.ஜி.எனா்ஜி பிரைவேட் லிமிடெட், சென்னை

பெறப்பட்ட ஒன்பது பிரேரணைகளை நகராட்சி நிா்வாக ஆணையரின் அனுமதியுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினரால் கடந்த 24-08-2007 அன்று திறக்கப்பட்டது. அவற்றினை திறனாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண்கள் : 1, 2, 3, 5 , 6, 8 மற்றும் 9-ல் குறிப்பிடப்பட்டுள்ள 7 நிறுவனங்கள் மட்டுமே தகுதி பெற்றன. தகுதி பெற்ற நிறுவனங்களுக்கு இரண்டாம் கட்ட தோ்வுக்கான ஒப்பந்தப்புள்ளி கேட்பறிக்கை அடங்கிய ஒப்பந்தபத்திர படிவங்கள் (Request for Proposal and Concession Agreement Documents) அனுப்பி வைக்கப்பட்டது. நிா்ணயிக்கப்பட்ட காலக்கெடுவான 10-10-2007 தேதி வரை கீழ்கண்ட மூன்று நிறுவனங்கள் மட்டுமே அவா்களது பிரேரணைகளை கொடுத்தனா் அவை பின்வருமாறு :

1) தி / ள் யு.பி.எல் - பி.இ.ஐ.எல், மும்பை
2) தி / ள் ராம்கி என்வைரோ இஞ்சினியா்ஸ் லிமிடெட், ஹைதராபாத்
3) தி / ள் ஆன்டணி வேஸ்ட் ஹான்டலிங் செல் பிரைவேட் லிமிடெட், நாவி மும்பை

பெறப்பட்ட மூன்று பிரேரணைகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழுவினரால் தொழில் நுட்ப அடிப்படையில் திறனாய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி தோ்ச்சி பெற்றனா். அவை பின்வருமாறு :

1) தி / ள் யு.பி.எல் - பி.இ.ஐ.எல், மும்பை
2) தி / ள் ஆன்டணி வேஸ்ட் ஹான்டலிங் செல் பிரைவேட் லிமிடெட், நாவி மும்பை

அதன் பின்னா் மேலே குறிப்பிட்ட தகுதி பெற்ற இரண்டு நிறுவனத்தாா் கொடுத்திருந்த விலைப்புள்ளிகள் அடங்கிய ஒப்பந்தப்புள்ளி உறை (Financial Proposal ) களை 17-10-2007 அன்று திறக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1) | தி / ள் யு.பி.எல் - பி.இ.ஐ.எல், மும்பை | : | ரூ. 30,13,27,070.88 |
| 2) | தி / ள் ஆன்டணி வேஸ்ட் ஹான்டலிங் செல் பிரைவேட் லிமிடெட், நாவி மும்பை | : | ரூ. 39,34,42,044.95 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிறுவனத்தாா்களில் தி / ள் யு.பி.எல் - பி.இ.ஐ.எல், மும்பை நிறுவனத்தாரை தோ்வு செய்து அவா்களால் கொடுக்கப்பட்டுள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ. 30,13,27,070.88-ஐ ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பாிந்துரை செய்து அறிக்கை வழங்கியுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட திறனாய்வுக்குழுவின் அறிக்கையினை மத்திய நகா்புற அமைச்சகம் 18-10-2007-ல் மேலாய்வு செய்து அனுமதி வழங்கியுள்ளது.

எனவே தி / ள் யு.பி.எல் - பி.இ.ஐ.எல், மும்பை நிறுவனத்தாரால் கொடுக்கப்பட்டுள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ. 30,13,27,070.88 யினை ஏற்று அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. .

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் : 13087 /2006/ எம்.டி.3

..7..

மா.ம.தீர்மான எண் : 189 நாள் : 30.10.2007

மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட RFP மற்றும் concession agreement படிவங்கள் மற்றும் நிபந்தனைகளை மன்றம் பரிசீலனை செய்து ஒப்புதல் அளிக்கப்பட்டது. Special Purpose Vehicle எனப்படும் அமைப்பினை ஏற்படுத்திக் கொண்டதற்கு அனுமதிக்கப்பட்டது. மற்றும் மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் அறிவுரைகளுக்கு ஏற்ப, பகுதி II ஆக நவீன குப்பை மாற்று நிலையங்கள் நிறுவி பராமரித்தல், இரண்டாம் கட்ட குப்பை அகற்றும் பணிகள் மேற்கொள்ளுதல், நவீன உரக்கிடங்கு நிறுவி பராமரித்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் சுகாதார கட்டமைப்பு நிறுவி பராமரித்தல் போன்ற பணிகளை பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership arrangements) செயல்படுத்தும் பொருட்டு, ஒப்பந்தப்புள்ளி கேட்பு அறிக்கை (RFP) கோரப்பட்டதில், இறுதிகட்டமாக தேர்ச்சி பெற்ற தி/ ள் யு.பி.எல்.-பி.இ. ஐ.எல். மும்பை நிறுவனத்தினரால் கொடுக்கப்பட்ட குறைவான ஒப்பந்தப்புள்ளியில் கொடுக்கப்பட்டுள்ள நிகர தற்போதைய மதிப்பு ( Net Present Value) டிப்பிங் கட்டணம் உட்பட ரூ. 30,13,27,070.88–ஐ, ஒப்பந்தப்புள்ளி படிவங்களில் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி ஏற்றுக்கொண்டு மேற்கண்ட நிறுவனத்திற்கு ஒப்படைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இத்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி, வரும் 2008-ம் ஆண்டு முதல் 2027-ம் ஆண்டு வரை அதாவது 20 ஆண்டு காலத்திற்கு நவீன குப்பை மாற்று நிலையங்கள் அமைத்து குப்பை அதற்கும் பணிகள் செய்தல், உரக்கிடங்கில் மக்கும் குப்பைகள் மூலம் உரம் தயாரித்தல், மக்காத குப்பைகளை சுகாதார கட்டமைப்பில் கழிவு செய்து பராமரித்தல் மற்றும் தற்பொழுது குப்பைக் கிடங்கில் தேங்கியுள்ள குப்பைகளை விஞ்ஞான முறைப்படி கழிவு செய்தல் போன்ற பணிகளுக்கு, மேற்கண்ட குறைவான ஒப்பந்தப்புள்ளியில் கொடுக்கப்பட்ட டிப்பிங் கட்டணங்களை அனுமதித்து மேற்கண்ட நிகர தற்போதைய மதிப்பு செலவினத்தை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் ஏற்கனவே மத்திய நகர்ப்புற அமைச்சகம் அனுமதித்துள்ள (RFP) மற்றும் concession agreement -ல் அவசியத்திற்கு ஏற்ப உரிய திருத்தங்களை ஏற்படுத்தி, ஒப்பந்தப்புள்ளி கேட்பறிக்கை படிவங்களின்படி, ஆண்டொன்றிக்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 1.00 (ஒரு ரூபாய் மட்டும்) வீதம் நில குத்தகை வாடகை தொகை(Land Lease Rent)-யினை நிர்ணயம் செய்து மேற்கண்ட நிறுவனத்தாரிடம் வெள்ளலூர் கிடங்கில் 200 ஏக்கர் நிலத்தையும், நான்கு குப்பை மாற்று நிலையத்திற்கு தேவைப்படும் நிலங்களையும், மேற்கண்ட கட்டண விகிதத்தில் குத்தகை கட்டணம் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்படைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு இம்மாநகராட்சியின் சார்பில் அனுகூல ஒப்பந்தம் (Concession Agreement), நில குத்தகை ஒப்பந்தம் (Land Lease Agreement) மற்றும் ஏனைய ஆவணங்களில் கையொப்பமிட ஆணையருக்கு இம்மன்றம் முழு அதிகாரம் வழங்க ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 6

இந்திய அரசு, உழைக்கும் பெண்களுக்கு சலுகை செய்யும் பொருட்டு மானியத் தொகையுடன் மகளிர் தங்கும் விடுதிகள் (Working Women's Hostel) கட்ட கடனுதவி வழங்குகிறது. தற்போது இந்த விடுதிகளுக்கு திரையரங்கம் /உணவு விடுதிகள்/ தங்கும் விடுதிகள் என்ற பொதுவான வகைப்பாட்டில் சொத்துவரி விதிக்கப்பட்டு வருகிறது. இதனால் வர்த்தகம்போல் அதிக வரித்தொகையினை செலுத்தவேண்டிய சூழ்நிலை இருப்பதால், இதனை மாற்றிக் குறைத்து நிர்ணயம் செய்யவேண்டும் என 4-வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது அடிப்படை மதிப்பு சதுரடிக்கு ரூ 7.80 என விதிப்பதை மாற்றி அமைத்து நிர்ணயம் செய்வது தொடர்பாக மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண் **14655/2006/** கிஅ4



<u>மா.ந.ம.தீர்மான எண் : 190 நாள் : 30.10.2007</u>

உழைக்கும் மகளிர் தங்கும் விடுதிகளுக்கு அடிப்படை மதிப்பு சதுர அடிக்கு ரூ. 4.00 என மாற்றி நிர்ணயம் செய்து சொத்துவரி விதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 7

பொருள் - பணியமைப்பு-கோவை மாநகராட்சி-உதவி பொறியாளர், இளநிலை பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குதல்-உதவி நிர்வாக பொறியாளர் பணியிடங்ககளைநிரப்ப விதிகளை தளர்த்துதல்-தொடர்பாக.

பார்வை-
1) இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள் 4.7.07
2) அரசாணை எண். 237, ந.நி.ம.கு.வ.துறை, நாள் 26.09.1996
3) அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்களுக்கு முகவரியிட்ட இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள் 27.07.2007
4) அரசு கடிதம் எண். 33899 /எம்சி.4 /2007-1, நாள் 19.10.2007
5) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண் 45963 /2007/ F 4 நாள் 25.10.2007

பார்வை 1-ல் கண்ட இவ்வலுவக செயல்முறைகளில் உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர்களின் இறுதி பணிமூப்பு பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. பார்வை 2-ல் கண்ட இம்மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கு துறை பணியமைப்பு விதி 1996-ல் விதி எண். 4-ன்படி, உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் பணியிடத்திலிருந்து உதவி நிர்வாக பொறியாளராக பதவி உயர்வு அளிப்பதற்கு அடிப்படைத் தகுதியாக உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளராக மூன்று வருடங்கள் மண்டல அலுவலகங்களிலும், ஒரு வருடம் மைய அலுவலகத்திலும் பணிபுரிந்திருக்கவேண்டும் என்ற விதிமுறை உள்ளது. இம்மாநகராட்சியில் மேற்கண்ட தகுதிகளுடன் கூடிய உதவி பொறியாளர் /இளநிலை பொறியாளர் ஒருவரும் இல்லை.

தற்போது இம்மாநகராட்சியில் மண்டல அலுவலகங்களில் மூன்று உதவி நிர்வாக பொறியாளர் பணியிடமும், மைய அலுவலகத்தில் ஒரு உதவி நிர்வாக பொறியாளர் பணியிடமும் ஆக மொத்தம் நான்கு உதவி நிர்வாக பொறியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே இப்பணியிடங்களை நிரப்பும் பொருட்டு, கோவை மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கு துறை பணியமைப்பு விதி 1996-ல் விதி எண். 4-ல் தெரிவிக்கப்பட்ட உதவி செயற் பொறியாளர் பதவிக்கு தேவையான அடிப்படைத் தகுதியினை தளர்வு செய்யக்கோரி பார்வை 3-ல் கண்ட இவ்வலுவலக கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

பார்வை 4-ல் கண்ட அரசு கடிதத்திலும் பார்வை 5-ல் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்திலும் உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளராக நான்கு ஆண்டுகள் பணிபுரிந்து, உதவி நிர்வாக பொறியாளர் பதவிக்கு தேவையான இதர தகுதிகள் இருப்பின் மாமன்ற ஒப்புதலுடன் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விதி தளர்வு கோரியும் அரசின் உறுதியாக்கத்திற்கு பிரேரனை அனுப்பவும் அறிவுரை வழங்கப்பட்டள்ளது.

இம்மாநகராட்சியில் பார்வை 1-ல் கண்ட பணிமூப்பு பட்டியலின்படி, கீழ்க்கண்ட உதவி பொறியாளர் /இளநிலை பொறியாளர்கள் நான்கு வருடங்களுக்கும் மேலாக மண்டலங்களில் உதவி பொறியாளர், இளநிலை பொறியாளர்களாக பணிபுரிந்துள்ளனர்.

1) திரு. டி. ஞானவேலு, உதவி பொறியாளர்,

2) திருமதி. ஆர். சசிப்பிரியா, உதவி பொறியாளர்,

3) திரு. வி. வீரராகவன், இளநிலை பொறியாளர்,

4) திருமதி. கே. சகுந்தலா, இளநிலை பொறியாளர்,



மாமன்றத்தின் ஒப்புதலைப் பெற்று இவர்களை உதவி நிர்வாக பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கலாம். மேலும் இவர்களக்கு கோவை மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கு துறை பணியமைப்பு விதி 1996-ல் விதி எண். 4-ல் உள்ள விதிமுறைகளை தளர்வு செய்யக் கோரியும், உதவி நிர்வாக பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டதை உறுதியாக்கம் செய்யக்கோரியும், அரசிற்கு கடிதங்கள் அனுப்பவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவர்களின் பதவி உயர்வு, பணிமூப்பு பட்டியலில் தெரிவித்துள்ளபடி, வழக்கு எண்கள் 4704/2005, 11970/2005, 28565/2005 ஆகியவற்றின் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டதாகும்.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண் .17768/2006/ எம்சி. 1

<u>மா.ம.தீ. எண் 191 நாள் 30.10.2007</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெற வழக்கில் தொடர்புடையவர்களைக் கேட்டுக் கொள்ளலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 8

பொருள்- பணியமைப்பு – கோவை மாநகராட்சி– உதவி பொறியாளர் - பணியிடங்களை நிரப்புதல் – மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக.

-------

இம்மாநகராட்சியில் காலியாக உள்ள 3 (மூன்று) உதவி பொறியாளர் பணியிடங்களுக்கு நேரிடை நியமனம் செய்ய தொழில்கல்வி மற்றும் நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலர், சென்னை அவர்களின் கடிதம் அ.ஆ.எண். 90818 /2007 நாள் 14.9.2007-ல் தகுதியான நபர்களின் பெயர் பட்டியல் பெறப்பட்டது.

இவர்களை 23.10.2007 அன்று காலை 11.00 மணியளவில் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நியமனக்குழு முன்னிலையில் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் ஆஜராக கோரியதன்பேரில், இப்பட்டியலில் கண்ட 3 தகுதியான நபர்களை நியமனக்குழு தனது தீர்மான எண் 25 /2007-ல் தேர்வு செய்துள்ளது.

கோவை மாநகராட்சி சட்டம் பிரிவு 106 (2) (b)-ன்படி, வகுப்பு II-ன் கீழ் வரும் பதவிகளை அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு மாமன்றம் நிரப்பலாம் என்பதால் மாமன்றத்தின் அனமதி பெற்று அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு நிரப்ப மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர் /விலாசம் | இனவாரி சுழற்சி | பிறந்த தேதி | வயது | கல்வித்தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1) | பி. விமலா, 29-பி, அரசு பி.எச்.சி. குவார்ட்டர்ஸ், சோமனூர், கோயம்புத்தூர் மாவட்டம். | S.C | 6.3.1977 | 30 | பி.ஜி. சிவில் இன்ஜினியரிங் | |
| 2) | சி. பாலகிருஷ்ணன், 19 /135, குணவதி இல்லம், போலீஸ் குவார்ட்டர்ஸ்பின்புறம், போத்தனூர், கோவை மாவட்டம் | S.C | 25.03.1974 | 33 | பி.ஜி. சிவில் இன்ஜினியரிங் | |
| 3) | ஆர். எழில், | S.C | 7.11.1977 | 30 | பி.ஜி. சிவில் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 22, பிருந்தாவன் நகர், கவுண்டம்பாளையம், கோயம்புத்துார். | | | | இன்ஜினியரிங் | |

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 2375/07/எம்சி. 1

..10..

மா.ம.தீ. எண் 192 நாள் 30.10.2007

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்துார் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்துார் மாநகராட்சி